# கலித்தொகை பாலைக்கலியில் உவமைகள்

முனைவர் கு.டாலி ஆரோக்கியமேரி
உதவிப்பேராசிரியர்
தமிழாய்வுத்துறை
புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி.
திருச்சிராப்பள்ளி - 620002

8

**ஆய்வுச் சுருக்கம்**

‘கலித்தொகை பாலைத்திணையில் உவமைகள்’ என்பது கட்டுரையின் தலைப்பாகும். இக்கட்டுரை எட்டுத்தொகை நூல்களில் இடம்பெற்றுள்ள கலித்தொகை பாடல்களில் பாலைத்திணைப் பாடல்களை முழுமையாக எடுத்துக்கொண்டு அப்பாடல்கள் வழியாக புலவர்கள் கையாண்ட உவமைகளைக் கண்டறிந்து விரிவாகவும் விளக்கமாகவும் ஆராய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

**திறவுச்சொற்கள்: வினை –வேலை, வரை- நிலம், பசலை-நோய், எழில்-அழகு.**

**முன்னுரை**

தமிழ் இலக்கியங்களை சங்ககாலம், சங்கம் மருவிய காலம் பக்தி இலக்கிய காலம், காப்பிய இலக்கியம் சிற்றிலக்கியம் இக்கால இலக்கியம் என்று வகைப்படுத்தியுள்ளனர். அவற்றுள் சங்க இலக்கியம் காலத்தால் அழியாத புகழ் பெற்றது. இச்சங்க இலக்கியத்தில் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான கலித்தொகை பெரும் சிறப்பு பெற்றது. இதனைக் ‘கற்றறிந்தார் ஏத்தும் கலி’ என்று சிறப்புடன் அழைப்பர். இத்தகைய சிறப்பு வாய்ந்த கலித்தொகை பாலைக்கலியில் உவமைகள் எனும் தலைப்பில் இக்கட்டுரை அமைந்துள்ளது.

**கருதுகோள்**

இயற்கையோடு இயைந்து வாழ்வு நடத்தியவன் சங்கத்தமிழன். தமிழகத்தை நான்கு நிலமாகவும், அவற்றுள் வாழும் மக்களின் ஒழுக்கத்தை ஐந்தாகவும் பாகுபடுத்தினர். தொல்காப்பியர் நிலத்தை முல்லை, குறிஞ்சி மருதம், நெய்தல் என்று முறைப்படுத்தி அதற்கேற்ப திணையை அமைத்தார். நிலமில்லா பாலையைக் கடைசியில் வைத்தார். ஆனால் கலித்தொகை நிலமில்லா பாலைத் திணைக்கு முதலிடம் அளித்துள்ளது. கைக்கிளை பெருந்திணை ஒழுக்கங்களைக் கூறி எந்த நூலிலும் முதலில் கொள்ளாத பாலையை முதலிற் கொண்ட திணை வைப்புமுறை மிகவும் சிறப்பிற்குரியது. முல்லையும் குறிஞ்சியும் வறட்சியின் காரணமாக பாலை நிலமாகத் தோன்றும். ஆதலால் பாலைக்கு நிலமில்லை என்பதையும் இக்கட்டுரை விளக்கியுரைப்பதாக அமையும்.

**கலித்தொகை காட்டும் சமூகம்**

களிற்றையும் அடக்கும் ஆற்றல் இசைக்கு உண்டு என்ற உண்மையும், நீராடல் பற்றிய செய்தியும், மக்களின் நல்வாழ்விற்கான நெறிகளும் இவற்றில் விளக்கப்பட்டுள்ளன. மடலேறுதல், பொருந்தாக் காதல், ஒருதலைக்காமம் ஆகியன பற்றி செய்திகள் அதிகம் உள்ளன.

கலித்தொகையில் ஐந்து நிலத்தைப் பற்றிய பாடல் குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. அவற்றில் குறிஞ்சிக் கலியில் 29 பாடல்களும், பாலைக்கலியில் 35 பாடல்களும், முல்லைக் கலியில் 17 பாடல்களும், மருதக் கலியில் 36 பாடல்களும், நெய்தற் கலியில் 33 பாடல்களும் சேர்த்து 150 பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

**சங்க இலக்கிய உவமைகள்**

உவமைகளால் சிறப்பு பெற்ற இலக்கியம் சங்க இலக்கியங்கள் ஆகும். அக இலக்கியங்களிலும், புற இலக்கியங்களிலும் பெரும்பாலான பாடல்கள் உவமைகளோடு மட்டுமே விளங்குகின்றன. எளிய உவமைகளால் மிகவும் சிறந்த பொருளை விளங்க வைப்பது சங்க இலக்கியங்களின் சிறப்பியல்புகளுள் ஒன்றாகும்.

**உவமை**

உவமை என்பது ஒரு பொருளைப் பிறிதொரு பொருளுக்கு ஒப்பிட்டுக் கூறுவது. அதாவது தெரிவிக்க விரும்பும் பொருளைத் தெரிந்த பழைய பொருளோடு, உவம உருபுகளைப் பயன்படுத்திக் கூறுவது உவமையாகும்.

தொல்காப்பியர் இதனை,

“வினை பயன் மெய் உரு என்ற நான்கே
வகைபெற வந்த உவமத் தோற்றம்.” 1

வினையாகிய தொழில், பயன், மெய்யாகிய வடிவம், உருவாகிய நிறம் ஆகிய நான்கு வகையாக உவமைகள் தோன்றும் என்கிறார்.

தண்டியலங்காரம் என்னும் இலக்கண நூல் உவமையணியைக் கீழ்வருமாறு விளக்குகிறது.

“பண்பும் தொழிலும் பயனும் என்றிவற்றின்
ஒன்றும் பலவும் பொருளொடு போருள் புணர்த்து
ஒப்புமை தோன்றச் செப்புவது உவமை” 2

என்ற நூற்பா விளக்குகிறது. தண்டியலங்காரம் குறிப்பிடும் பொருளணிகள் 35. இதில் தலைமை அணியாக உவமையணி அமைவதாலும் இந்த அணியிலிருந்தே பிற அணிகள் தோன்றுவதாலும் இந்த அணியை ‘தாய் அணி’ என்றும் அழைப்பர்.

இத்தகைய உவமைகள் பண்பாட்டை விளக்கும் கருவிகளாகச் செயல்படுகின்றன. உவமைகள் படைப்பாளருக்கு ஏற்பவும், படைக்கப் படுபவருக்கு ஏற்பவும், பொருளுக்கு ஏற்பவும் பலவகைப்பட்டு அமைதல் இயல்பு. பொருளின் உயர்வைக் காட்ட அதனினும் உயர்ந்த உவமையைக் கையாள்வது சிறந்ததாகும். உவமை, உவமம், உவமானம் மூன்றும் ஒரே பொருளைத் தரும் சொற்களேயானாலும் அவற்றிற்கிடையே நுட்பமான வேறுபாடு உள்ளது. உவமை என்ற சொல்லிற்கு உவத்தல் என்பதும், உவமம் என்ற சொல்லிற்கு உவமை கூறுதல் என்றும், உவமானம் என்பதற்கு உவமையாகக் கூறப்பட்ட பொருள் என்றும் வேறுபாடு கொள்ளலாம்.

தலைவன் பொருள் ஈட்டுவதற்தாகச் செல்கிறான். தோழி தலைவனின் இயல்பைக் கூறி தலைவியைப் பிரியாமல் இருப்பதே பொருள் என்பதை வலியுறுத்தி அவன் பிரிவை தடுத்து நிறுத்துகிறாள்.

“ அன்பு அன்று என்றுயான் கூற அன்புற்றுக்
காழ் வரை நில்லாக் கடுங்களிற்று ஒருத்தல்
யாழ்வரைத் தங்கி யாங்குத் தாழ்புநின்
தொல்கவின் தொலைதல் அஞ்சி என்
சொல்வரைத் தங்கினர் காத லோரே.” 3 (கலி - பாலை-2)

தலைவி துன்புற்று வருந்தும்படி பிரிவது அன்பு அன்று என்று தலைவி தலைவனிடம் கூறுகின்றபோது தலைவன் பிரிவுத் துன்பம் நேர்ந்தால் தலைவியின் அழகு அழியும் என்று அஞ்சி பிரிந்து செல்வதைத் தவிர்த்தார். அங்குசத்திற்கு அடங்காத மதயானை யாழ் இசைக்கு வயப்படுவது போல அன்புடன் தன் சொல்லுக்கு கட்டு;ப்பட்டதாகத் தோழி கூறுகிறாள்.

இல்வாழ்க்;;;கையிற் செல்லும் பொதுவான விருப்பத்திற்கு அங்குசமும் இரந்தோருக்கு ஈயாமை இழிவு என்ற உணர்வுக்கு மதமும் உவமையாக இப்பாடலில் கூறப்பட்டுள்ளது .

தலைவன் தன் பிரிவைப் பற்றி தோழியிடம் கூற, அவள் தலைவியிடம் இச்செய்தியைக் கூறினால் அவளுக்கு என்ன நேரும் என்பதைக் குறித்து தன் கருத்துக்களைத் தலைவனிடம் தோழி கூறுகிறாள். தலைவன் தன் செலவை நிறுத்தும் வண்ணம் இவ் உவமை கையாளப்படுகிறது

“ நீயே, செய்வினை மருங்கின் செலவுஅயர்ந்து யாழநின்
கைபுனை வல்வில் ஞாண்உளர் தீயே இவட்கே
செய்வுஉறு மண்டிலம் மையாப் பதுபோல்
மைஇல் வாள்முகம் பசப்புஊ ரும்மே.” 4 (கலி - பாலை – 7)

தலைவன் பொருளீட்டுவதற்காகப் பிரிந்து செல்ல விரும்பி அழகிய வில்லின் நாணைத் தடவுகின்றான். ஆனால் தலைவிக்கோ களங்கமில்லாது அமைந்த ஒரு சந்திரனின் மேல்பரப்பில் மேகம் படர்வது போல முகத்தில் பசலை நிறம் படர்வதாகப் பாடல் அமைந்துள்ளது. களங்கமற்ற சந்திரனைக் கற்பனை செய்து அதில் மேகம் படிந்தது போல என உவமை அமைந்துள்ளது.

உடன்போக்கு மேற்கொண்டத் தலைவியை இடைச்சுரத்து முக்கோல் பகைவரைக் கண்டு ‘இவ்வகைப்பட்டாரை ஆண்டுக் காணீரோ” என வினவியபோது,

“பலஉறு நறுஞ்சாந்தம் படுபவர்க்கு அல்லதை
மலையுளே பிறப்பினும் மலைக்கு அவைதாம் என்செய்யும்?
சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க்கு அல்லதை
நீருளே பிறப்பினும் நீர்க்கு அவைதாம் என்செய்யும்” 5

(கலி – பாலை – 9 )

சந்தனம் பூசிப் புலர்வது ஆதலின் சிறுநேரத்து அணியாகவும், முத்துமாலை ஒளியுடையது ஆதலின் எக்காலத்தும் உள்ள அணியாகவும், யாழிசை கேட்ட பொழுதே நுண்ணிய இன்பம் தருவதாகவும் பயன்படும். அதுபோலத் தலைவி தலைவனுக்கு, உற்ற காலத்து உதவும் துணையாகவும் என்றும் பிரியாத வாழ்க்கைத் துணையாகவும், நுண்ணிய இன்பம் தருபவளாகவும் இருப்பதாக உவமை அமைந்துள்ளது.

**உள்ளுறையுவமை**

பிரிவு உணர்த்திய தலைவனிடம் தானும் உடன் வருவதாகக் கூறுகிறாள் தலைவி. அதற்குத் தலைவன் பாலையின் வெம்மையினையும், தலைவியின் மென்மையினையும் எடுத்துக் கூறி தவிர்த்து விடுகிறான். தலைவி நாளது சின்மையும் இளமையது அருமையையும் எடுத்துக்கூறி தன்னையும் உடன் அழைத்துச் செல்ல வற்புறுத்துகிறாள்.

“அணைஅரும் வெம்மைய காடுஎனக் கூறுவீர்
குணைகழி கல்லாத கல்பிறங்கு ஆரிடைப்
பணைஎருத்து எழில்ஏற்றின் பின்னர்ப்
பிணையும் காணீரோ? பிரியுமோ அவையே?”6 (கலி – பாலை – 20)

அம்பு ஊடுருவ முடியாதவாறு கற்கள் குவிந்து கிடக்கும் அந்தக்காட்டில் பெருமையுடைய காளையும் பசுவும் ஒன்றையொன்று பிரிந்து வருவதைப் பார்த்திருப்பீரோ? அதுபோல நான் உம்மைப் பிரியாது உடன் வர விரும்புகின்றேன் என்று தலைவி கூறுவதாகப் பாடல் அமைந்துள்ளது.

பிரிந்து செல்லும் தலைவன் தன்னையும் உடன் கொண்டு செல்லாதது கண்டு, தான் உயிர் வாழாது இறந்துபடுவேன் என்று தலைவி கூறுகிறாள்.

“தோள்நலம் உண்டு துறக்கப் பட்டோர்
வேண்நீருண்ட குடைஓ ரன்னர்
நுல்குநர் புரிந்து நலன்உணப் பட்டோர்
அல்குநர் போகிய ஊரோ ரன்னர்” 7 ( கலி – பாலை – 23)

தலைவர் தம் தோளின் மென்மையை அனுபவித்துப் பிரியப்பட்ட தலைவியர், நீர் வேட்கையால் பனை ஓலையில் செய்து நீர் பருகிப் பின் கீழே போட்டுவிட்ட குடைக்கு ஒப்பாவார். தலைவரால் விரும்பி அருள் செய்யப்பட்டு அவர் நுகர்ந்தபின் பிரியப்பட்டோர், வாழ்ந்த மக்கள் வெற்றிடமாக விட்டுச் சென்ற ஊருக்கு ஒப்பாவார்.

ஊரார் சிரிக்க யான் உயிர் வாழமாட்டேன் என்கிறாள் தலைவி. குடை, ஊர் முதலிய உவமைகளால் தலைவனைப் பிரிந்து வாழும் வாழ்க்கை பயனற்றது என்பதை இப்பாடல் விளக்குகிறது.

தன் நாட்டு மன்னனிடம் போரில் தோற்ற பகைவர்கள் கப்பமாக அளித்த நாட்டினைக் காவல் செய்யும் பணியை மேற்கொண்டு தலைவன் பிரிய முயல்கிறான். அதை அறிந்த தலைவி துயரம் கொள்கிறாள்.

அதைக் கண்ட தோழி தலைவனிடம் தலைவியின் பிரிவாற்றாத் தன்மையையும், இளமைப் பருவத்தின் அருமையினையும் கூறி தலைவனைத் தடுத்து நிறுத்துகிறாள்.

இதனை>

“நாற்றம்சால் நளிபொய்கை அடைமுதிர் முகையிற்குக்
கூற்றம்போல் குறைபடூஉம் வாழ்நாளும் நிலையுமோ?
மருந்துபோல் மருந்தாகி மனன்உவப்பப்
பெரும்பெயர் மீளி பெணர்ந்தனன் செலவே.” 8 (கலி – பாலை – 17)

பகையரசர் தந்த நாட்டைக் காத்தற்காகப் பணி மேற்கொண்டு நீ திரும்பும்வரை, வண்டுகள் தேன் உண்ணும்படி பூக்கள் மலர்ந்து விளங்கும் செடிகள் புதுப்புது மொட்டுக்களை அரும்புவதற்குக் காரணமாகப் பொய்கையில் உள்ள நீர், நாளுக்கு நாள் குறைவது போல் இவளது இளமை நீங்குமே தவிர நிலைக்காது. அழகும், வாழ்நாளும், இளமையும் நிலையாமைக்கு முறையே சந்திரன் ஒளியும், மொட்டின் வாழ்வும், பொய்கையின் நிறைவும் நிலையாத தன்மையாக உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

**முடிவுரை**

பெருமையாகப் பேசப்படும் அணிகளில் உவமை அணி என்பது போற்றுதற்குரியதாகும். சொற்சுவை, பொருட்சுவை போன்ற பலவிதமான உத்திகளைக் கொண்டு ஓர் இலக்கியம் மக்கள் மனதில் நீங்கா இடம் பெறவேண்டுமெனில் அதில் உவமை மிகத் திறமையாகக் கையாளப்பட்டு கவிதைகளுக்கு உரமாக உவமைகள் அமைகின்றன.

**சான்றெண் விளக்கம்**

1. தொல்காப்பியம் - உவமவியல் - நூற்பா – 1
2. தண்டியலங்காரம் - நூற்பா – 31
3. கலி – பாலை - 2
4. மேலது பா.எண் 7
5. மேலது – பா.எண் – 9
6. மேலது – பா.எண் 20
7. மேலது – எண் 23
8. மேலது – பா.எண் 17